தொகுதி-9 எண் 3
Vol. 9 No. 3

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*
*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. A. Palanisamy*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. M. Ramakrishnan*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

ஆனி-புரட்டாசி 2052
July - September 2021

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

29 பகுதி-7
Part -7

தொகுதி-9 எண் 3
Vol. 9 No. 3

ஆனி-புரட்டாசி 2052
July - September 2021

ISSN : 2321 - 984X


| | | |
|---|---|---|
| 301. மு. இரமேஷ் & க. சிங்காரவேலு | காப்பியங்களில் வானியல் செய்திகள் | 2125-2131 |
| 302. சி. லலிதா & டே. வில்சன் | பதிற்றுப்பத்தில் மெய்ப்பாட்டுக் கூறுகள் | 2132-2138 |
| 303. க. சுதா | எட்டுத்தொகை காட்டும் பாலைத்திணைக்குடி மரபு | 2139-2145 |
| 304. த. சங்கீதா & வி. சிவசாமி | சுந்தரரின் வாழ்வும் முக்திப்பேறும் | 2146-2156 |
| 305. ஆ. வெற்றிசெல்வி & இரா. விஜயராணி | பதிற்றுப்பத்தில் இடம்பெற்ற வியப்பார்ந்த கருத்தாடல் | 2157-2163 |
| 306. விஜயா.சா & த. கிறிஸ்டல் ரெஜி | வண்ண நிலவன் கதைகளில் பெண்கள் நிலை | 2164-2170 |
| 307. க. சுந்தராம்பாள் | ஈரோடு மாவட்ட வேட்டுவக்கவுண்டரின மக்களின் பழக்கவழக்கங்களில் சமுதாய மாற்றங்கள் | 2171-2176 |
| 308. அஸ்வினி பிரியா. ம & அ.கோ.ஸ்ரீ தேவி | திருக்குறளில் உயிர்க்கொல்லாமை | 2177-2185 |
| 309. த. பிரசல்யா | 2000 முதல் 2019 வரையிலான பன்னிரெண்டாம் வகுப்புப் பாடநூல்கள்: - ஓர் ஒப்பீடு | 2186-2191 |
| 310. அருள்மொழி. பு நா. அமிர்தாராணி | பாரதியாரும் பட்டுகோட்டையாரும் - ஒரு சமுதாயப் பார்வை | 2192-2198 |
| 311. அ. சதீஸ் | எட்டுத்தொகை அக நூல்களில் மனிதநேயக் கூறுகள் | 2198-2202 |
| 312. பவானி. ஏ & க. பால்பாண்டி | சிறுபாணாற்றுப்படை - ஆய்வு | 2203-2209 |
| 313. R. SELVAGANAPATHY & A. EDWARD WILLIAM BENJAMIN | EFFECTIVENESS OF ONLINE LEARNING AND ACHIEVEMENT IN CHEMISTRY AT THE HIGHER SECONDARY LEVEL | 2210-2214 |
| 314. வெ. அன்பு & த. கிறிஸ்டல் ரெஜி | அகநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள் | 2215-2222 |
| 315. வே.விஜயரங்கம் | ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்ட அணைக்கட்டுகள் | 2223-2229 |
| 316. கீதா. ரா & மு. பரந்தாமன் | சுஜாதாவின் நாவல் மீண்டும் ஜினோ பாத்திர படைப்பு | 2230-2236 |
| 317. P. KARTHIKEYAN & B. KARTHIKEYAN | DELTATIC RESOURCES AND ECOSYSTEM IN GADILAM RIVER:AN OVERVIEW | 2237-2241 |
| 318. கோ. கௌரி & த. கிறிஸ்டல் ரெஜி | பதிற்றுப்பத்தில் வரலாற்றுக் கூறுகள் | 2242-2249 |
| 319. ந. பெரியசாமி | சங்க இலக்கியங்களில் பறவைகள் | 2250-2257 |
| 320. கமலகண்ணன். க & ஜோ.அந்தோணி ஜெயஷீலா | கவிஞர் கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களில் அவரது தத்துவ சிந்தனைகள் | 2258-2264 |
| 321. NAJEEB P. M. | VIRTUE AS THE BASIS OF HAPPINESS: A COMPARATIVE STUDY OF THIRUVALLUVAR'S *KURAL* AND ARISTOTLE'S *NICOMACHEAN ETHICS* | 2265-2270 |
| 322. ச. கௌரி & கா.வ. பரந்தாமன் | முல்லைப்பாட்டில் போர்ப்பாசறை | 2271-2278 |
| 323. தா. மதன் & டி தேவசம்பத் | கிறிஸ்தவக் கதைபாடல்கள் உணர்த்தும் நீதிக்கருத்துக்கள் | 2279-2283 |
| 324. ஜெயமணி தேவகிருபை.ஜெ & கா.வ. பரந்தாமன் | குறுந்தொகையில் கூற்று நிலைப்பாடு | 2284-2294 |
| 325. K. JAYARAMAN. JAYALAKSHMY P.M SURESH KJ | A STUDY ON THE EXPERIENCE OF TEACHERS IN BLENDED LEARNING APPROACH | 2295-2303 |
| 326. கண்ணகி. சோ & க. பால்பாண்டி | கவிஞர் பிருந்தாசாரதியின் கவிதைகளில் காட்சி படிமங்கள் | 2304-2310 |
| 327. ம. அரும்பு | பாலைக்கலி கூறும் உவமைகள் | 2311-2319 |
| 328. ஏஞ்சலின்பாரிஜாதம். பொ அ.கோ.ஸ்ரீ தேவி | சிலப்பதிகாரம் கதை மாந்தர்கள் | 2320-2327 |
| 329. மோ. துர்காதேவி & தி.மே.சா.சந்திரமணி ஜெபராணி | வண்ண நிலவனின் காலம் காட்டும் தனிமனித வாழ்வியல் | 2328-2331 |
| 330. பங்கஜம் கு & க பால்பாண்டி | கவிஞர் அப்துல் ரகுமானின் கவிதைகளில் சமூக சிந்தனைகள் | 2332-2337 |
| 331. இரா. நிவேதா & கு.ர. சரளா | "நாகராணியின் முற்றம்" நாவலில் விளிம்புநிலைப் பெண்கள் | 2338-2344 |
| 332. பட்டுசாமி. அ & க. பால்பாண்டி | புதுமைப்பித்தன் சிறுகதைகளில் சமுதாயச் சிந்தனை | 2345-2352 |
| 333. த. அன்புமதி | புறநானூற்றில் புள்ளியீற்றுச் சொற்கள் உயிர்களத்துடன் புணர்தல் | 2353-2358 |
| 334. ராம்பாபு ம.க & மு. பரந்தாமன் | கவிஞர் வைரமுத்து கவிதைகளில் சமூகச் சிந்தனைகள் | 2359-2365 |
| 335. இராம. மாணிக்கவாசகன் | குமரகுருபரர் பாடல்களில் இலக்கிய நயங்கள் | 2366-2372 |
| 336. சதீஷ்குமார். ச & த. கிறிஸ்டல் ரெஜி | மலைபடுகடாம் கூறும் இயற்கை வளமும் வாழ்வியல் சிந்தனைகளும் | 2373-2379 |
| 337. மோ. நித்தியலஷ்மி & இரா. சிவகுமார் | சங்க இலக்கியங்களில் தகவல் தொடர்பு ஊடகங்கள் | 2380-2385 |
| 338. சாந்தி. ம & நா. அமிர்தாராணி | கலித்தொகையில் தோழி | 2386-2392 |
| 339. வை. வைத்தியகுமார் & இரா. சிவகுமாரன் | பாவண்ணன் சிறுகதைகளில் உவமை உத்தி | 2393-2398 |
| 340. ஜெ. சுதா & கு. கருப்புசாமிநாதராஜன் | இந்து தமிழ் திசை நாளிதழின் விளம்பரக்கலையும் வகைகளும் நோக்கங்களும் பயன்களும் | 2399-2403 |
| 341. செந்தமிழ்செல்வி. இரா & நா. அமிர்தாராணி | அகநானூற்றில் பண்டையக்கால மக்களின் பண்பாடும் வாழ்க்கை முறையும் | 2404-2411 |
| 342. சா. கண்மணி | புறநானூற்று சமுதாயம் ஒரு பார்வை | 2412-2416 |
| 343. செ. நித்தியா தேவி | மதுரைக் காஞ்சியில் அழகுவனப்பு | 2417-2424 |
| 344. POONAM & SUDARSHAN YADAV | SCIENCE EDUCATION IN HIGHER SECONDARY SCHOOLS (INFRASTRUCTURAL AND PRINCIPAL'S PERSPECTIVE) | 2425-2436 |
| 345. M. SANDHIYA | ADYAR RIVER POLLUTION– A STUDY | 2437-2443 |
| 346. பிரதாப் பர்தசார் அ & க. பால்பாண்டி | திருமூலர் கூறும் வழிநிலைகள் | 2444-2451 |
| 347. ச. ஞானசௌந்தரி & மு. அருணகிரி | தமிழில் சொல்லிலக்கண நூல்கள் - ஒரு பார்வை | 2452-2459 |
| 348. R. SARANYA & A. THOLAPPAN | EMOTIONAL INTELLIGENCE AND LEADERSHIP QUALITY OF B.Ed STUDENT-TEACHERS WITH RESPECT TO THEIR DEMOGRAPHIC VARIABLES | 2460-2464 |
| 349. பொ. வேலு & மு. பரந்தாமன் | ஜெயமோகனின் வெள்ளையானை சமூக பார்வை | 2465-2471 |
| 350. GEETHA S & K. NACHIMUTHU | E-CONTENT EFFECTIVE OF TEACHING TAMIL POETRY AT HIGHER SECONDARY LEVEL | 2472-2476 |


Published by : Raja Publications, No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241

**சீ. லலிதா**
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை.
Ref.No.34493/Ph.D.-K6/Tamil/Full Time/October 2013/Date: 01.10.2013
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி-600 002, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் டே. வில்சன்**
ஆய்வு நெறியாளர் மற்றும் உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி-600 002, தமிழ்நாடு, இந்தியா.

### ஆய்வுச் சுருக்கம்

சேர மன்னர்களின் வரலாற்றை மட்டுமே பறைசாற்றும் விதமாக அமைந்த, பதினெண் மேற்கணக்கு நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து மட்டும் ஆய்வு எல்லையாகக் கொண்டு மெய்ப்பாட்டுக் கூறுகள் ஆராயப்பட்டுள்ளது. மேலும் இந்நூலில் சிறப்புகள் எடுத்தாளப்பட்டுள்ளது. மொழியாளர்கள், திறனாய்வாளர்கள், உரையாசிரியரகள் கூறும் விளக்கங்களையும் கருத்துக்களையும் கொண்டு மெய்ப்பாடு ஆராயப்பட்டுள்ளது. பதிற்றுப்பத்தில் மெய்ப்பாட்டுக் கூறுகள் எந்தெந்தப் பாடல்களில் இடம்பெற்றுள்ளது என்பதைக் காட்டி அடிக்குறிப்புகளுடன் விளக்கம் தரப்பட்டுள்ளது.

### கலைச்சொற்கள்

கலிங்கம் - போர்வை: பட்டாலியன்ற ஆடை, வணர் - கடைகுழன்ற கூந்தல், பின்றை - பின்னால்: பின்பு, எஃகம் - படைக்கருவிகள், பாண்டில் விளக்கு - கால் விளக்கினது.

### முன்னுரை

பழந்தமிழர்களின் வாழ்வியலை அறிய உதவும் இலக்கியங்களைப் போல, பழந்தமிழ்நாட்டின் வரலாற்றை அறிய நெறிமுறையோடு எழுதப்பெற்ற வரலாற்று நூல் கிடையாது. இது பெருங்குறையாகவே இன்றுவரையும் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்றன. ஆயினும், அமைதிகாண விழையும் பலர் புறநானூற்றையும், பதிற்றுப்பத்தையும் வரலாற்று இலக்கியம் எனக் கூறி விளக்கமும் தருவர். அதில் புறநானூற்றில் தமிழ்நாட்டை ஆண்டு வந்த பழம் பெரும் மன்னர்களாகக் கருதப்படுவர்கள் சேர, சோழ, பாண்டியர் ஆவர். அவர்தம் வரலாறு கலந்த இலக்கிய வடிவங்களைக் கண்டு கொள்ளவும் ஆய்வினை மேற்கொள்ளவும் நாம் விழைகிறோம். சேர மன்னர்கள் எண்மரைப் பற்றிய வரலாறு நன்கு விளக்கம் பெற்று முழு வரலாற்று நூலாகவே போற்றப்படும் 'பதிற்றுபத்து' பற்றிக் கூறுவர். இதிலும், இலக்கிய மணம் வீசும் வரலாற்று உண்மைகள் தான் இடம் பெற்றுள்ளன என்பதை யாரும் மறுக்க இயலாது. இந்நூலில் அவர்தம் வீரம், காதல், கொடை மற்றும் சமூக உறுப்பினர்கள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் மெய்ப்பாட்டுக் கூறுகள் மிகுதியும் இடம் பெற்றிருப்பதால் தான் இலக்கிய மணம் வீசுகிறது. இந்நூலில் மெய்ப்பாட்டுக் கூறுகள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதைக் காணலாம்.

### பதிற்றுப்பத்து

பழந்தமிழ் நூல்களுள் ஒன்றாகக் கருதப்படுவது பதிற்றுப்பத்து. இது புறப்பொருள் பற்றியது. சேரமன்னர்களைப் பற்றி மட்டுமே அமைந்த பாடல்களின் தொகுப்பு ஆகும். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் வண்ணமும், தூக்கும், துறையும் குறிக்கப்பட்டுள்ளது.

இசையோடு பாடப்படும் நூல். இறுதியில் பதிகம் கொண்டது. "ஒரு சேர அரச குலத்தினரை மட்டும் முன் நிறுத்தி, அவர் தம் வழியையும், ஆட்சியையும், போரையும் பண்புகளையும் மன்னாயத்துக்கு வேண்டுமளவு தொகுத்துச் சொல்லும் வரலாற்றிலக்கியம் பதிற்றுப் பத்தாகும்"[1] எனப் பதிற்றுப்பத்தின் பெற்றியினை மொழியியலர் முதறிஞர் வ. சு. ப. மாணிக்கம் கூறுவர். இந்நூலில் இடம் பெற்ற 'பதிகம்' எனப்படும் ஒன்று வரலாற்றுச் செய்திகளை முறையாக எடுத்துக்காட்டுவதைக் காணலாம். "தமிழகத்தில் ஆரியர்கள் வந்து இரண்டற கலந்து வாழ்ந்து வந்த விபரங்களும் கூறப்படுகின்றன"[2]. "பழந்தமிழர் போற்றி வந்த பழங்கலைகள், கலைஞர்கள் பற்றிய செய்திகள் இடம் பெற்றுள்ளன. பழந்தமிழ் மரபுகளை இந்நூலில் காணமுடிகிறது"[3]. மேலும் பல, சேரநாடு பற்றிய பழஞ்செய்திகள், பழக்க வழக்கங்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் விளக்க முயலும் புலவர்கள் அவை சிறப்பாக அமைய எண்வகை மெய்ப்பாடுகளின் துணையை நாடுகின்றனர். இவற்றின் நிலைக்களன்கள் 32-இல் பலவற்றை நினைவுபடுத்துவது போல் மெய்ப்பாடுகள் அமைந்துள்ளதையும் தெளிவாகக் காணமுடிகிறது.

### மெய்ப்பாடு

மெய்ப்பாடு என்பது வெளிப்படுவது என்று பொருள்படும். ஊன்றி நோக்கும் போது சுவையுணர்ச்சியே விருப்பு, வெறுப்பு முதலியவைகளை வெளிக் கொணர்வதாகவும், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலிய மெய்க்குறிகளுடன் வெளிப்படுத்தும் சுவைக்கு மெய்ப்பாடு என்று கூறுவர்.

விளையாட்டு மாந்தரிடமாகத் தோன்றிய நகை முதலிய எண்வகை மெய்ப்பாடுகளும் பொருள், உணர்வு, மனக்குறிப்பு, வெளிப்பாடு என்ற நிலைகளில் வெளிக்கொணரப்படுகின்றன. மெய்ப்பாடு என்பது,

'உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்
மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந் தோரே'

தொல். உரைவளம் பக்.10

என செயிற்றியம் கூறுகிறது. மேலும் மெய்யின் கண் தோன்றுவது மெய்ப்பாடு ஆகும்.

### பதிற்றுப்பத்து பாடல்களில் மெய்ப்பாட்டுக் கூறுகள்

குமட்டூர்க் கண்ணனார் பாடிய இரண்டாம் பத்து இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனின் வரலாறு, புகழ், வீரம், கொடை, ஆட்சிசிறப்பு அனைத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

'நீர்ப்படு பருந்தின் இருஞ்சிறகு அன்ன
நிலம்தின் சிதாஅர் களைந்த பின்றை
நூலாக் கலிங்கம் வாலரைக் கொளீஇ
வணர்இருங் கதுப்பின் வாங்கமை மென்தோள்
வசையில் மகளிர் வயங்கிழை அணிய
அமர்புமெய் ஆர்த்த சுற்றமொடு
நுகர்தற் இனிதுநின் பெருங்கலி மகிழ்வே!'
(பதிற்றுப் பத்து; பாடல்12; அடிகள் -19-25)

இதில், 'நெடுஞ்சேரலாதனே நீ மழையில் நனைத்த பருந்தின் சிறகு போன்ற மண் அரித்த மாசுடைய கந்தலாடையை நீக்கிப் பட்டாடையை அவர்கள் அரையில் உடுத்துமாறு செய்வாய். தெளிந்த கூந்தலையும், மூங்கில் போன்ற தோல்களையும் உடைய குற்றமற்ற விறலியர் ஒளிமிக்க அணிகலன்களை அணியச் செய்வாய், அந்நிலையில் உண்மையான மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்யும் சுற்றத்தோடு நீ வீற்றிருக்கும் திருவோலக்கச் சிறப்புக் கண்டு அனுபவித்தற்கு இனியதாகும்' எனப் புலவர் கூறி பாராட்டுவர். இதில் மூன்று மெய்ப்பாட்டு கூறுகள் உள்ளன. 'மழையில் நனைந்த பருந்தின் சிறகு போன்ற மண் அரித்த மாசுடைய கந்தலாடையை நீக்கிப் பட்டாடையை அணிவித்தான் மன்னன்' என்பதில் பாணர் குடும்பம் வறுமையால் வாடிய நிலையில் அணிந்த ஆடைகளின் இழிநிலையைக் கூறி இரங்கும் நிலையால் 'இளிவரல் சுவை' வெளிப்பட்டது. 'விறலியர்க்கு அணிவந்த பட்டாடை மற்றும் பொன் அணிகலன்களால் அவர்கள்

பெற்ற மகிழ்ச்சியால் வெளிவரும் மெய்ப்பாடு 'உவகைச் சுவை' ஆகும். 'மன்னன் சுற்றம் சூழச்சிம்மாசனத்தில் வீற்றிருந்த திருவோலக்கம் 'பெருமை' வெளிப்படுமாறு அமைந்த வியப்பெனும் 'மருட்கை' மெய்ப்பாடு ஆகும்' என்பதை காணலாம்.

அடுத்து, 'சேரன் பல்யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாலைக் கௌதமனார்' பாடிய பதிற்றுப்பத்து பாடலில் இடம்பெற்ற மெய்ப்பாடு பற்றிக் காணலாம். இது மூன்றாம் பத்தாக அமைந்துள்ளது. இதன் இறுதிப்பாட்டு 'புகன்ற ஆயம்' என்ற தலைப்பில் அமைந்துள்ளது. இதன் 20ஆம் அடிமுதல் 32ஆம் அடிவரை மக்கள் கூட்டமாகக்கூடித் திருவிழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடி சுற்றதார்க்கு விருந்து வைத்து மகிழ்வார்.

இந்த அடிகளில் உவகை மெய்ப்பாட்டிற்கான நான்கு நிலைக்களன்களால் உருவான மகிழ்ச்சி ஆரவாரம் வெளிப்படுவதைக் காணலாம். தொல்காப்பியர்,

'செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று
அல்லல் நீத்த உவகை நான்கே'
(தொல்: மெய்-இயல்: நூற்பா -11)

எனும் நூற்பாவில் குறிப்பிடுவர். உரையாசிரியர் பேராசிரியர் இதற்கு, "செல்வமென்பது நுகர்ச்சி: புலனென்பது கல்விப் பயனாகிய அறிவுடைமை: புணர்வு என்பது காமப்புணர்ச்சி முதலியன: விளையாட்டு என்பது யாறுங் குளனுங் காவுமாடி பதியிகந்து வருதல் முதலாயின. இவை நான்கும் பொருளாக உவகைச்சுவை தோன்றும்: உவகையெனினும் மகிழ்ச்சியெனினும் ஒன்றேயாம்"[4] எனப் பொருள் கூறி விளக்குவர்.

மேலே குறிப்பிட்ட பாடல் அடிகளில் வெளிப்படும் மெய்ப்பாடு இந்த நான்கின் வழியாய் உருவான உவகை மெய்ப்பாடு நிறைந்திருப்பதைக் காணலாம். இதில், 'மருத மரத்தின் உச்சிவரை புது வெள்ளம் வந்து பெருகி அங்குள்ள வைக்கோல் புரிகளால் சுற்றப்பட்ட மணல் கோட்டையைக் கரைத்து அழிக்கும். மக்கள் வெள்ளத்தினை அணைகட்டித் தடுத்து நிறுத்த விரும்பும் மக்கள் கூட்டம் பழையான ஊரில் விழாவினைக் கண்டு திரும்பும் அத்தகைய செழிப்புடைய மருதநிலமும். தினைபுனத்தை உழுது பண்படுத்தித்தினைப் பயிரை விளைவிக்கும் முல்லைநில மக்கள் மணமிக்க காட்டு மல்லிகைக் கொடி படர்ந்த வளமான குடியிருப்புகளில் வந்த விருந்தினர்க்குத் தினை மாவை பகுத்து கொடுக்கும் முல்லைநிலமும். வாடல் பூக்களைக் கொண்ட காடுகளையும், அரக்கு போல் சிவந்த மணல் மேடுகளையும், ஒளி பொருந்திய நெற்றியையுடைய மகளிர் கழல் அணிந்த தத்தம் தலைவர்களோடு உடன் போக்கில் செல்லக்கூடிய வானுற வளர்ந்த மரங்களையுடைய காட்டுப் பகுதியாகிய பாலை நிலமும, ஐவகை நிலப்பகுதிகளிலும் பிற பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களும் வேந்தரும் வேளிர்களும் ஒன்றுபட்டுக் கடலிலும் காட்டிலும் பாதுகாப்பாக அரண்களை அமைந்திருந்தாலும் உன் முரசு முழங்கினால் நடுங்குவர்' எனக் கூறியுள்ளார்.

இதில், ஐவகை நிலங்களின் செழிப்பு, மக்கள் வாழ்வு, மகிழ்ச்சி, திருவிழாவின் ஆரவாரம் முதலியவை உவகை மெய்ப்பாட்டை நன்கு வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். செல்வத்தாலும், அறிவாலும், பல்வகை இன்பத்தாலும் விதவிதமான விளையாட்டாலும் ஐவகை நிலங்களிலும் திருவிழாக்களும், ஆரவாரமும், மகிழ்ச்சியும் பரவி உவகை பரவியுள்ளது.

நான்காம்பத்தினைப் பாடியவர் காப்பியாற்றுக் காப்பியனார் எனும் புலவர் ஆவார். இப்பாட்டின் தலைவன் களங்காய்க் கண்ணிநார் முடிச்சேரல் ஆவான். இம்மன்னனின் வெற்றிச்சிறப்பு நால்வகைப் படைகளால் உருவானதை 'வரம்பில் வெள்ளம்' என்ற தலைப்பில் 12 அடிகளால் அமைந்த பாடல் மூலம் அறியலாம். கடலுக்குக் கரையுண்டு சேரன் படைக்குக் கரையில்லை அதனால், வரம்பில்லாத வெள்ளம் போன்ற படையெனப் புலவர் கூறுவர்.

'இறும்பூதால் பெரிதே! கொடித்தேர் அண்ணல்!
வடிமணி அணைத்த பணைமருள் நோன்தாள்,
கடிமரத்தான் களிறு அணைத்து:
நெடுநீர் துறைகலங்க,
மூழ்த்து இறுத்த வியன்தா னையொடு
புலம்கெட நெரிதரும் வரம்பில் வெள்ளம்
வான்மதி லாக வேல்மிளை உயர்த்து,
வில்விசை உமிழ்ந்த வைம்முள் அம்பின்
செவ்வாய் எ·கம் வளைஇய அகழின்
காரிடி உடுமின் உரறு முரசின்
கால்வழங்கு ஆரெயில் கருதின்
போரெதிர் வேந்தர் ஒடுஉப நின்னே'
(பதிற்றுப்பத்து பாட்டு 33)

இதில், தொல்காப்பியர் கல்வி, தறுகண், புகழ், கொடையான நிலைக்களன்களால் உருவான வீரத்தின் பன்முகச் செயல்கள் வெளிப்படுகின்றன. பாடலின் பொருளை உணர்ந்தால் இது உண்மை என்பதை நன்கு அறியமுடியும். இப்பாடலில், 'கொடி உயர்ந்த தேரினையுடைய அண்ணலே! இது வியப்பாக உள்ளது. வடித்துச் செய்த மணிகள் இரண்டு பக்கங்களிலும் கட்டப்பெற்றனவும், முரசினைப் போன்ற வலிமையான கால்களை உடையனவாகிய யானைகளைப் பகைவர்களின் காவல் மரத்தில் கட்டி ஆழமான நீர்கொண்ட நீர் நிலைகளின் துறைகள் கலங்கும்படிப் பகை நாட்டு எல்லையில் தங்கித் தூசிப்படையோடு அழியும்படி நெருங்கிச்சேரும். அந்தப் படைவெள்ளம் வாள் படைகள் மதிலாகவும், வேல் படிகள் காவல்காடாகவும் உயர்ந்து விளங்க, வில் உமிழ்ந்த கூரிய அம்புகள் முட்களாகவும், போர்க்களம் செல்லாது எஞ்சி இருக்கும் படைக்கருவிகள் அகழியாகவும் அமைய இடிபோன்று முழங்கும் முரசினைக் கொண்டு காலால் நடந்து செல்லும் அரிய அரணாகத் திகழும், உன் படைவெள்ளம் வெல்லுதற்குரிய அரணாக விளங்குவதனைக் கருதப்பார்த்தால் உன்னோடு போர் புரிய வந்த பகை அரசர்கள் போரினை நினையாது புறங்கொடுத்து நீங்குவர். இச்செயல் மிக வியப்பாக உள்ளது எனும் கருத்து இடம் பெற்றுள்ளது. இதில் மன்னரின் அரசியல் அறிவு, அஞ்சாமை, புகழ் கலைஞர்களுக்கும், வறியவர்களுக்கும் வாரி வழங்கும் கொடைத்திறன் முதலானவை இப்பகுதிகளின் கூறப்பட்டுள்ளது. எல்லாம் களங்காய்க் கண்ணி நார் முடிச்சேரல் எனும் மன்னனின் பெருமிதத்தைப் பன்முகவடிவில் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

அடுத்து வருவது ஐந்தாம்பத்து, பரணர் பாடியது கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவன் எனும் சேரமன்னனின் எல்லா மாண்புகளையும் பத்துப்பாட்டுக்களில் விரிவாக எடுத்துக்கூறுவர். இவற்றுள் ஒருபாடல், 'நன்னுதல் விறலியர்' எனும் பெயரைப் பெற்றது. 'நல்ல நெற்றியையுடைய ஆடல் பாடல்களில் வல்லமையுடைய விறலியர்க்கு வாரி வழங்கிய வள்ளல். அதற்கென பகைவர் நாட்டில் போர்வெற்றியால் பெற்ற செல்வத்தைச் செலவழித்தாய்' எனப் புகழ்ந்துகூறும் கருத்து நிறைந்த பாடல். இதில் கொடைத்திறன் முதன்மையாகவும் போர்த்திறன் துணைமையாகவும் இருந்ததைப் புலவர் வியப்புடன் வியந்து பாராட்டுகிறார். இதனைத் தொல்காப்பியர் மருட்கை எனும் மெய்ப்பாட்டினுள் அடக்குவர். அவர்,

'புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே'
(தொல்: மெய்ப். நூற்பா -07)

எனக் கூறுவர். இதில், "புதிதாக் கண்டனவும், கழியப் பெரியவனவாயினவும், இறப்பு சிறியனவும், ஒன்று ஒன்றாய்த் திரிந்தனவுமென நான்கும் பற்றி வியப்பு தோன்றும்"[5] எனப் பொருள் கூறுவர்.

'அட்டு ஆனானே குட்டுவன்! அடுதொறும்
பெற்று ஆனாரே பரிசிலர் களிறே!
வரைமிசை இழிதரும் அருவியின், மாடத்து
வளிமுனை அவிர்வரும் கொடி நுடங்கு தெருவில்
சொரிசுரை கவரும் நெய்வழிபு உராலின்
பாண்டில் விளக்குப் பருஉச்சுடர் அழல

நன்னுதல் விறலியர் ஆடும்
தொல்நகர் வரைப்பின் அவன் உரைஆ
னாவே!' (பதிற்றுப்பத்து பாட்டு 47)

என்ற பாடலைப் படித்தாலே சொற்களின் அமைப்பு, அடுக்கு வியப்பைப் பெரிதாக உருவாக்கிவிடும்.

இப்பாடலில் பரணர், 'செங்குட்டுவன் பகைவர்களைப் கொன்று அழித்து, அழிக்கும் தோறும் அவன் வென்ற நாட்டிலுள்ள களிறுகளை அவனைச் சார்ந்தோர் பரிசிலாகப் பெறுவர். மலையிலிருந்து விழும் அருவியைப் போன்ற உயர்ந்த மாடங்களில் காற்று வீசிக் கொடிகள் அசைகின்ற தெருவில் நெய் ஊற்றப்பெற்ற விளக்கின் திரிக்குழாயில் நெய் பரவி வழிவதால், கால்களைக் கொண்ட விளக்கில் தீச்சுடர் ஒளிவீச, அவ்வொளியல் நல்ல நெற்றியினையுடைய விறலியர் ஆடுவர். இவர்கள் ஆடும் பழைமையான நகர எல்லைகளில் குட்டுவனைப் பற்றிய புகழ்ச்சி மொழிகள் நீங்காதனவாய் விளங்கின.' என்று மன்னரைப் புகழ்ந்தும் வியந்தும் கூறுவர். எனவே, பாடல் முழுவதும் 'மருட்கை' எனும் மெய்ப்பாட்டால் நிறைந்து வியப்பார்ந்த விளக்கங்களைப் பெற்றிருப்பதைக் காணலாம்.

மானிட உண்மைகளைப் பாடும் பதிற்றுப்பத்து

"ஓர் இலக்கியத்திற்கு இன்றியமையாத கூறுகளில் அறிவுக்கூறு என்பதும் ஒன்றாகும். அறிவுக்கூறு என்பது செய்தி, சிந்தனை, மானிட உண்மை, வாழ்வியல் உண்மை முதலானவற்றைக் குறிக்கும். சிறந்த இலக்கியம் இவைகளை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். இலக்கியம் உணர்த்தும் செய்திகூறும் உண்மைகளும் அதன்கண் நிறைந்திருத்தல் வேண்டும். அத்தோடு அவைகள் தவறற்றவை-களாகவும் தெளிவு வாய்ந்தவைகளாகவும் இருத்தல் வேண்டும்"[6] இத்தகு உண்மை நெறிகளைப் பதிற்றுப்பத்தில் காணலாம்.

சேர மன்னர்கள் பலரது வரலாறு பல பாடல்களில் இடம் பெற்றிருப்பதைத்தான் பதிற்றுப்பத்தில் நாம் காண்கிறோம். புனைந்துரை என்பது சுவை பயக்கவே வழிவகுக்க வேண்டும் இது கற்பார்க்கு இன்பத்தைத் தர வேண்டும்: மயக்கத்தையும் குழப்பத்தையும் தரக்கூடாது. செய்திகள் சமூக, வரலாற்று உண்மைகளாக இருக்கின்றன. மன்னனை மையமாகப் கொண்டே சமூகமும் நாடும் இயங்க வேண்டும் அதனை இந்தப் பதிற்றுப்பத்தில் தெளிவாகவே காணமுடிகிறது. இந்நூலில் வரலாற்று உண்மைகள் சுவைபட அமைய வேண்டும் என்ற நோக்கில் தான் புனைந்துறைகள் இடம் பெற்றுள்ளன. அதற்கு மெய்ப்பாடுகள் எட்டும் துணை நின்றன என்பதனை பதிற்றுப்பத்தில் தெளிவாகக் காணலாம்.

"ஓர் இலக்கியத்தை நாம் படிக்கும்போது நாம் ஆய்ந்துணர வேண்டியது அவ்விலக்கியம் நமக்குச்சுவை தருகிறதா, அது நம் நெஞ்சைத் தொடுகிறதா என்பன மட்டுமல்ல. அதனை நாம் இன்பமுற சுவைத்தது தகுதியுடையதுதானா என்பதனையும் நாம் ஆய்ந்துணர வேண்டும். எனவே, ஓரிலக்கியம் நமக்கு இன்பம் தருவதால் மட்டுமே சிறந்ததாகிவிடாது. அவ்வின்பம் தகுதியுடையதும் தரமுடையதுமாக இருப்பின் அவ்விலக்கியம் சிறப்புடையதென மதிக்கப்பெறும்"[7] என்ற திறனாய்வாளரின் கருத்து பதிற்றுப்பத்தினை அளவிட்டு, அதன் சிறப்பை கண்டறிய பேருதவி புரிகிறது எனலாம். அதற்கு மெய்ப்பாடுகள் பெரிதும் உதவுகின்றன.

பதிற்றுப்பத்துப் பாடல்களில் இடம்பெற்ற எல்லா மெய்ப்பாட்டின் கூற்றுகள் சேர மன்னர்களின் சிறப்புகளை, தனித்தன்மைகளை, மாண்புகளை கண்டறிய சிறந்த அளவுகோலாக உள்ளன என்பதைத் தெளிவாகக் காண முடிகிறது. இந்நூலில் 'நகை: இளிவரல்: மருட்கை: பெருமிதம் மற்றும் உவகை எனும் மெய்ப்பாடுகள்தான் இடம் பெறும்'. பிற இலைமறைகாய்களாகவே தென்படுகின்றன. வீரம், ஆட்சித்திறன், சமூக நலம் பேணல், கொடை, விருந்தோம்பல், கலையின்பம், இல்லறச்சிறப்பு முதலானவை சிறக்க

மெய்ப்பாடுகள் உதவின என்பதைத் தெளிவாகக் காணமுடிகிறது. இதற்கென மேலும் சில பாடல்களைச் சான்றாகக் காணலாம்.

ஆறாம்பத்தில் 'சில்வளை விறலி' எனும் தலைப்பில் உள்ள பாட்டு விறலி ஆற்றுப்படையாக அமைந்துள்ளது. சேர மன்னரிடம் பரிசு பெற்று திரும்புவர்களைக் கண்டு, தாமும் தம் சுற்றத்தாரோடு அம்மன்னனைக் கண்டு பரிசு பெற கூவி அழைத்துச் செல்ல முயல்கிறாள். 'பாணர் கையிலுள்ள பேரியாழில் விரலால் மீட்டி இசைத்துப் பாடிய பாலைப் பண்ணை மிடற்று குரலிசையில் தமிழ்சி என்னும் துறைப்பொருள் பொருந்துமாறு பாடிக் கண்டு வருவதற்காக மெல்லிய நிலவழியினைச் சிறிய அடியால் கடந்து செல்வோமா?' எனக்கூறி தலைநகரை நோக்கி அனைவரையும் அழைத்துச் சென்றாள் விறலி. இப்பகுதியில் இடம்பெற்ற மெய்ப்பாடு 'கொடை' எனும் நிலைக்களனால் உருவான 'பெருமிதம்' எனும் மெய்ப்பாடு ஆகும். சேர மன்னரின் கொடை சிறப்பை அறிந்த விறலியர் தம் கலை நயத்தை மன்னர் முன் எடுத்துக்காட்டி உதவி பெற்று மகிழ அங்கு செல்வோம் எனக்கூறி உறவினரை அழைத்துச் செல்ல முற்பட்டாள். இதன் மூலம் மன்னரின் கொடைப்பண்பு நயம் பட எடுத்துக் கூறப்பட்டது.

பதிற்றுப்பத்தில் ஏழாம் பத்தினைக் கபிலர் பாடினார். சேர மன்னன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் புகழ்ந்து பாடும் புலவர், "பார்ப்பார்க்கு அல்லது பணிபு அறியலையே! பணியா உள்ளமொடு அணிவரக் கெழீஇ நட்டோர்க்கு அல்லது கண் அஞ்சலையே! வணங்குசிலை பொருதநின் மணம் கமழ் அகலம் மகளிர்க்கு அல்லது மலர்ப்பு அறியலையே! நிலம் திறம் பெயரும் காலை ஆயினும், கிளந்த சொல் நீ பொய்ப்பு அறியலையே!"[1] என்று மருட்கைச் சுவை நிறைந்த மெய்ப்பாடு வெளிப்படுமாறு பாடியுள்ளதைக் காணலாம்.

எட்டாம்பத்து மற்றும் ஒன்பதாம் பத்து பதிற்றுப்பத்து பாடல்களிலும் இத்தகு உவகை, மருட்கை மற்றும் பெருமிதம் முதலான மெய்ப்பாடுகள் வெளிப்படுவதைக் காணலாம். இவை புனைந்துறைகளாக அமையாது உண்மையாக அமைந்தன எனலாம்.

## தொகுப்புரை

இதுவரை பதிற்றுப்பத்து எனும் புறப்பொருள் நூலில் பரவலாகப் பயன்படுத்திய மெய்ப்பாடுகள் சிலவற்றைப் புலவர்கள் எவ்வெவ்வாறு கையாண்டு நூல் சிறக்க வழிவகுத்தனர் என்பதைக் காண முடிந்தது. இவையனைத்தும் பாடல்களின் உள்கட்டமைப்பு சிறப்பாக அமைய பேருதவி புரிந்தன என்பதை நன்கு காண முடிகிறது. மேலும், இம்மெய்ப்பாடுகள் உவமை, உருவகம், படிமம், குறியீடுகள் நன்கு அமையவும் உதவியுள்ளன. பெருமிதம், மருட்கை, உவகை, இளிவரல் போன்ற மெய்ப்பாட்டு நிலைக்கலன்கள் பதிற்றுப்பத்து பாடல்களில் சிறப்பாக அமைந்துள்ளது. பழங்கால சேர மன்னர்களின் வீரம், ஆட்சி முறையும் சிறப்பும், கொடை முதலியனவை நன்கு புலப்பட இந்த மெய்ப்பாடுகள் உதவின எனலாம்.

## முடிவுரை

பழந்தமிழ்ப் புலவர்கள் இந்த மெய்ப்பாடுகளை முறையாகப் பயன்படுத்தி பாடல்கள் சிறக்க முயன்றது போல, சில வரலாற்று உண்மைகள் வெளிப்படவும் பயன்படுத்தினர் எனக் காண முடிகிறது. மிகச்சிறப்பாக அக்கால கலைஞர்கள், கலைகள் மக்களாலும், மன்னர்களாலும் எவ்வாறு போற்றப்பட்டு வந்தன என்பதையும் கண்டறிய முடிகிறது. மெய்ப்பாட்டுக் கூறுகள் மிகுதியும் இடம் பெற்றிருப்பதால்தான் இலக்கிய மணம் வீசுகிறது. பதிற்றுப்பத்து மிகச்சிறந்த வரலாற்று நூல் மட்டுமென்று; மெய்ப்பாடுகள் சிறக்கவும், இலக்கிய நயம் வெளிப்படவும் இந்நூல் உதவிற்று எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. இரா.மோகன், தேர்ந்தெடுத்த சங்க இலக்கியப் பாடல்கள், பக்- 155-156

சாகித்திய அகாதெமி. புதுதில்லி. முதற்பதிப்பு 2017.

2. பதிற்றுப்பத்து. பாடல் எண் 64. உரைசால் வேள்வி எனக் குறிக்கப்பெறும் அடிகளில் ஆரியர் மரபு சுட்டப்படுகிறது.

'அறம் கரைந்து வயங்கி நாவின் பிறங்கிய
உரைசால் வேள்வி முடிந்த கேள்வி
அந்தணர் அருங்கலம் ஏற்ப, நீர்பட்டு
இருஞ்சேறு ஆடிய மணல்மலி முற்றம்'
(பதிற்றுப்பத்து பாடல் 64: அடிகள்-03-06)

3. பதிற்றுப்பத்து. பாடல் 18. கூந்தல் விறலியர். பாடல் 38. 'பரிசிலர் வெறுக்கை'. பாடல் 47. நல்நுதல் விறலியர். பாடல் 53 'சில்வளைவிறலி' பாடல் 58. 'ஏ விளங்கு தடக்கை' முதலானவையாகும்.

4. பேராசிரியர் உரை. தொல்காப்பியம். மெய்ப்பாட்டியல். ப-17. சாரதா பதிப்பகம். சென்னை. மறுபதிப்பு. 2018.

5. மேற்படி நூல். ப-41

6. டா. தா. ஏ. ஞானமூர்த்தி. இலக்கியத் திறனாய்வியல். ப-153. ஐந்திணைப் பதிப்பகம். சென்னை. மறுபதிப்பு. 2020.

7. மேற்படி நூல். ப-41.

8. பதிற்றுப்பத்து. ஏழாம்பத்து மூன்றாம் பாடல். அடிகள் 01-07

௸